செ. கு. எண்:218 நாள் :17.08.2013

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

## அறிக்கை – 17.8.2013

திண்டுக்கல் மாவட்டம், வேடச்சந்தூர் வட்டம், எரியோடு பேரூராட்சியைச் சேர்ந்த திரு. M.சுப்பிரமணி என்பவர் **17.8.2013** அன்று மின்சாரம் தாக்கி உயிரிழந்தார் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

இந்த துயர சம்பவத்தில் உயிரிழந்த திரு. சுப்பிரமணி குடும்பத்திற்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விபத்தில் எரியோடு பேரூராட்சியைச் சேர்ந்த திரு. நீலமேகம் என்கிற முனியப்பன், திரு. நாகராஜன், திரு. மூர்த்தி மற்றும் திரு. சீனிவாசன் ஆகியோர் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிந்து நான் வருத்தமடைந்தேன். இவர்களுக்கு நல்ல முறையில் சிகிச்சை அளிக்க மாவட்ட நிருவாகத்திற்கும், மருத்துவமனை அதிகாரிகளுக்கும் நான் உத்தரவிட்டுள்ளேன். காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் இவர்கள் அனைவரும் விரைவில் பூரண குணமடைந்து வீடு திரும்ப வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் துயரச் சம்பவத்தில் உயிரிழந்த சுப்பிரமணி குடும்பத்திற்கு ஒரு லட்சம் ரூபாயும், பலத்த காயமடைந்தவர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9